2014 ஜூலை 21]
201—

கால்நடை மருத்துவமனை

***41082—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஒட்டபட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, ஒட்டபட்டி ஊராட்சியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடைத் துறை விதிகளுக்குட்பட்டு 3,000, அலகுகளுக்குமேல் கால்நடைகள் உள்ளதால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினைப்பெற்று ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா நீங்கள் பன்முகத் துறையிலும் தன் முகம் பதித்தவர் அம்மா, தமிழன் பெருமைகளைத் தரணியெங்கும் விதைத்தவர் அம்மா. தமிழன் தன்மானத்தைத் தன்நம்பிக்கையால் தலைநிமிர வைத்தவர் அம்மா. அரியதாய் கிடைக்கும் தங்கத்தை அத்துணை ஏழைகளுக்கும் கொடுத்தவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை மக்கள் நலம்பெறவே ஏணியாய் அவர்கள் வாழ்விற்கு கோமாதா கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட

ஒட்டப்பட்டி ஊராட்சிக்கு கால்நடை மருத்துவமனை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆத்தூர் தொகுதிக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே யூனிட் ஒன்றையும், ஆத்தூர் கோட்டத்திற்கு நடமாடும் கால்நடை மருத்துவமனை ஒன்றையும், வளையமாதேவி ஊராட்சி, பைத்தூர் ஊராட்சி, கோபாலபுரம் ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிப் பகுதிகளும் அரசின் விதிகளுக்கு உட்பட்டிருப்பின் அப்பகுதிகளுக்கும் கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள அந்தப் பகுதிகளிலெல்லாம் எங்கள் மாவட்ட கால்நடைத் துறை இணை ஆய்வாளர் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.*

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வானம், ஒரே பூமி, கழகத்தின் ஒரே சாமி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விருதுநகர் மாவட்டம்,

2014 ஜூலை 21]

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளையாபுரத்தில் ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. அவற்றோடு மாத்திரமல்லாமல் சுற்றியிருக்கிற கிராமப்புறங்களிலும் கால்நடைகள் வளர்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, கருணையும், காருண்யமும் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள அந்த எடையபட்டி கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடைத் துறை விதிகளுக்குட்பட்டு, அங்கே அதிக கால்நடைகள் இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பிரம்மோற்சவ விழா

***36186—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், கும்பமுனிமங்கலம் அருள்மிகு ஸ்ரீஅகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழாவினை நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*